# The Challenges Faced by Vedda Women in Vakarai, Batticaloa: A Sociolinguistic Perspective

**Paheerathy Moses**
*Senior Lecturer, Sociology and Anthropology*
*Eastern University, SriLanka*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

DOI:
https://doi.org/10.5281/zenodo.18981728

**Abstract**

*This study examines the social, economic, cultural, and political problems faced by Vedda women living in the Vakarai area of the Batticaloa district in the Eastern Province of Sri Lanka, from a sociolinguistic perspective. The Veddas, an indigenous community of the country, are losing their traditional way of life and facing new social challenges in the post-war and economic globalization contexts. In particular, Vedda women face various challenges such as gender-based injustice, backwardness in education and health services, lack of employment opportunities, loss of cultural identity, and lack of political representation. This study explores their situation from social structural, cultural, economic, and gender perspectives. Finally, recommendations for improving the social status of Vedda women are also provided.*

***Keywords:*** *Vedda,Indigenous, Loss of Identity, Gender*

**References**

1. Deraniyagala, S. U. (1992). The Prehistory of Sri Lanka: An Ecological Perspective. Colombo: Department of Archaeological Survey.
2. Obeyesekere, Gananath (2002). The Vedda Villages of Anuradhapura: The Historical Anthropology of a Community in Sri Lanka. Colombo: Vikas Publishing House.
3. Seligmann, C. G., & Seligmann, B. Z. (1911). The Veddas. Cambridge: Cambridge University Press.
4. Perera, Sasanka (2013). Anthropology and the Marginalised. Indigenous Peoples of Sri Lanka. Colombo: Department of Sociology, University of Colombo.
5. Samarakoon, M. & Thangarajah, Y. (2020). "Patriarchy and Post-War Marginalization among the Eastern Vedda Communities." South Asia: Journal of Human Rights and Development, 18(3), 221-240.
6. Wijesekera, Nandadeva (1964). The Veddas in Transition. Colombo: The Ceylon Journal of Historical and Social Studies.

# மட்டக்களப்பு வாகரையில் வேடர் இனப் பெண்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களும் சமூக மொழியியல் நோக்கும்

***பகீரதி மோசேஸ்***
முதுநிலை விரிவுரையாளர், சமூகவியலும் மானிடவியலும்
கிழக்குப் பல்கலைக்கழகம்

***ஆய்வுச் சுருக்கம்***
*இவ்வாய்வு, இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள மட்டக்களப்பு மாவட்ட வாகரைப் பகுதியில் வாழும் வேடர் இனப் பெண்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார, கலாசார மற்றும் அரசியல் பிரச்சி னைகளை சமூக மொழியியல் கோணத்தில் ஆய்வு செய்கிறது. நாட்டின் தொன்மை சமூகமான வேடர்கள், தங்கள் பாரம்பரிய வாழ்க்கைமுறையை இழந்து. பிந்தைய போர் சூழலிலும், பொருளாதார உலகமயமாதல் சூழலிலும் புதிய சமூகச் சவால்களை எதிர்கொள்கின்றனர். குறிப்பாக வேடர் இனப் பெண்கள், பால்நிலை அடிப்படையிலான அநீதி, கல்வி மற்றும் சுகாதார சேவைகளில் பின்தங்குதல், வேலைவாய்ப்புகளின் பற்றாக்குறை, கலாசார அடையாள இழப்பு. மற்றும் அரசியல் பிரதிநிதித்துவமின்மை போன்ற பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். இவ்வாய்வு, அவர்களின் நிலையை சமூக அமைப்பியல், பண்பாடு பொருளாதார மற்றும் பாலின நோக்குகளில் ஆராய்கிறது. ஆய்வின் முடிவில், வேடர் பெண்களின் சமூகநிலை மேம்பாட்டிற்கான பரிந்துரைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.*
***திறவுச் சொற்கள்:*** *வேடர், தொன்மை, அடையாள இழப்பு, பால்நிலை*

இப்பகுதியின் இயற்கை வளங்கள், காட்டுப்பயிர்கள், கடல் மற்றும் நீர்நிலைகள் ஆகியவை அவர்களின் வாழ்வாதாரத்தின் அடிப்படையாக இருந்தன. வாகரை வேடர்களின் நம்பிக்கைகள், கதைகள் மற்றும் சடங்கு வழக்கங்கள் இயற்கையை மையமாகக் கொண்டவை. அவர்கள் காடு, மரம், விலங்கு, மழை போன்றவற்றை ஆன்மீக சக்திகளாகவும், புனித இடங்களாகவும் கருதுகின்றனர். மொழி மற்றும் கலாசார ரீதியாக, வாகரை வேடர்கள் தமிழ் மொழி பேசும் வேடர் சமூகமாக தங்களை வடிவமைத்துள்ளனர்.மத்திய மாகாணத்திலுள்ள தம்பானை, மஹியங்கணை போன்ற பகுதிகளில் வாழும் வேடர்கள் சிங்கள வழக்கில் பேசுகிறார்கள் என்றாலும், வாகரை வேடர்கள் ஃஜளக் நூற்றாண்டுகளாக தமிழர் சமூகங்களோடு இணைந்து வாழ்ந்ததனால் தமிழ்மொழியை ஏற்றுக்கொண்டுள்ளனர். இருப்பினும், அவர்கள் குல அடிப்படையிலான சமூக அமைப்பு, மூலிகை மருந்து வழக்குகள், பாரம்பரிய நடனங்கள், இசை மற்றும் ஆன்மீக நம்பிக்கைகள் ஆகியவற்றைத் தக்க வைத்துள்ளனர்.

சமூகவியல் பார்வையில் வாகரை வேடர்கள் இலங்கையின் பிந்தைய காலனியகால (Postcolonial) சமூக மாற்றங்களைப் புரிந்துகொள்ள முக்கியமான எடுத்துக்காட்டாக உள்ளனர். காலனிய ஆட்சி காலத்தில் நில சட்டங்கள். வனச் சட்டங்கள் மற்றும் மிஷனரி நடவடிக்கைகள் அவர்களின் பாரம்பரிய வாழ்வுமுறைகளை பாதித்தன. ஆனாலும் அவர்கள் சிறு அளவிலான விவசாயம், கூலி வேலைகள் மற்றும் மீன்பிடி மூலம் புதிய வாழ்க்கை முறைக்கு தங்களை பழக்கப்படுத்திக் கொண்டனர்.

இலங்கையின் உள்நாட்டுப் போர் (1983-2009) வாகரை வேடர்களுக்கு மிகக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியது. வாகரைப் பகுதி நீண்டகாலமாகப் போர்ப் பகுதியில் இருந்ததால், பல வேடர் குடும்பங்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. நிலங்களை இழந்தனர். கலாசார ஒற்றுமை பாதிக்கப்பட்டது. பாரம்பரிய அறிவு மங்கியது. ஆனால் போருக்குப் பிறகு, அவர்களின் கலாசார அடையாளத்தை மீண்டும் உயிர்ப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கலாசார அமைப்புகள் வாகரை வேடர்களின் பாரம்பரிய அறிவு, சடங்குகள் மற்றும் வாழ்க்கை முறைகளைப் பதிவு செய்யத் தொடங்கியுள்ளனர்.

பாரம்பரிய இன்றைய நிலையில், வாகரை வேடர்கள் பாரம்பரியம் மற்றும் நவீனத்துவம் ஆகிய இரண்டின் சந்திப்பில் வாழ்கின்றனர். மூத்தோர் தலைமையிலான நிர்வாக முறைகளோடு இணைந்து, இளைய தலைமுறை கல்வி, தொழில்நுட்பம் மற்றும் நகர்ப்புற கலாசாரத்தின் தாக்கத்தையும் அனுபவிக்கின்றது. நில உரிமை, சமூக அங்கீகாரம் மற்றும் பொருளாதார வாய்ப்புகள் ஆகியவை இன்னமும் அவர்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினைகளாக உள்ளன. எனவே. வாகரை வேடர்களின் ஆய்வு கலாசார நிலைத்தன்மை, அடையாளப் பாதுகாப்பு மற்றும் சமூக மாற்றம் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள முக்கியமான பார்வையொன்றை அளிக்கிறது.

மொத்தத்தில் வாகரை வேடர்கள் இலங்கையின் பாரம்பரியத்தின் உயிரோட்டமான சான்றாக திகழ்கின்றனர். அவர்களின் கலாசாரம் தொன்மையான வேடர் மரபுகளையும், கிழக்குப் பகுதி தமிழர் தாக்கத்தையும் இணைத்துச் சித்தரிக்கிறது. இலங்கையின் காலனிய ஆட்சிக் காலத்திலிருந்து தொடங்கிய சமூக மாற்றங்கள், கல்வி பரவல், அரசின் குடியேற்றத் திட்டங்கள் மற்றும் 30 ஆண்டுகள் நீடித்த உள்நாட்டு போரின் விளைவுகள், இக்குடியினத்தின் பாரம்பரிய அமைப்புக்களை சீர்குலைத்தன.

மட்டக்களப்பின் வடபகுதியில் உள்ள வாகரை மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களில் வாழும் கிழக்கு வேடர்கள், மற்ற மாகாணங்களில் உள்ள தம்பானை வேடர்களிலிருந்து கலாசார ரீதியாகவும்

மொழி ரீதியாகவும் மாறுபடுகின்றனர். இப்பகுதியின் வேடர்கள் பெரும்பாலும் தமிழ்மொழி பேசுவோர் இவர்களின் வாழ்க்கை கடல்சார்ந்த தொழில்கள் மற்றும் நாள் கூலி வேலைகளில் சார்ந்துள்ளது.

இந்த சூழவில் வேடர் பெண்களின் நிலை இன்னும் நெருக்கடியானதாக உள்ளது. குடும்பத்தில் தாயாக, தொழிலாளியாக, சமூக உறுப்பினராக இவர்களின் பங்களிப்பு முக்கியமானது. எனினும், பால்நிலை அடிப்படையிலான வேறுபாடு, பொருளாதார வறுமை, சுகாதார சேவைகளின் அணுகல் குறைபாடு. கலாசார அடையாள இழப்பு மற்றும் அரசியல் அக்கறையின்மை ஆகியவை இவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கின்றன.

## ஆய்வின் நோக்கம்

வாகரை வேடர் பெண்கள் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார. கலாசார மற்றும் அரசியல் பிரச்சினைகளை அடையாளப்படுத்துதல்,

பாலினம், இனத்தன்மை, வறுமை மற்றும் பிந்தைய போர் சூழல் ஆகியவை இவர்களின் வாழ்க்கையை எவ்வவாறு பாதிக்கின்றன என்பதைப் புரிதல்.

வேடர் பெண்களின் சமூக முன்னேற்றத்திற்கான நியாயமான, கலாசார உணர்வுள்ள பரிந்துரைகளை முன்வைத்தல்.

## ஆய்வுப் பிரச்சினை

மட்டக்களப்பு வாகரைப் பகுதியில் வாழும் வேடர்பெண்கள், சமுதாயத்தின் ஓரங்கட்டப்பட்ட குழுவாகத் திகழ்கின்றனர். சமூக மாற்றம், கல்வி பற்றாக்குறை, பொருளாதார வறுமை. சுகாதார சேவைகளின் பற்றாக்குறை மற்றும் கலாசார இழப்பு ஆகியவை அவர்களை இரட்டைப் புறக்கணிப்புக்குள் தள்ளியுள்ளது அதாவது

'பெண்' எனும் நிலை காரணமாகவும், 'வேடர்' எனும் இன அடையானத்தினாலும்,

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு முதலாம். இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டது. பல்வேறு சமூக அறிவியல் ஆய்வுகள், அரசியல் மற்றும் கலாசாரம் தொடர்பான ஆய்வுகள், அரசு மற்றும் அரசல்லாத நிறுவனங்களின் அறிக்கைகள், மற்றும் ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை இரண்டாம் நிலைத் தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதலாம் நிலை தரவுகளின்படி வாகரையில் வேடர்கள் வசிக்கும் கிராமங்களில் (குஞ்சங்குளம், மதுரங்கேணிக்குளம்) வசிக்கும் 50 குடும்பப் பெண்களை வயதின்படி (18-30, 31-50, 51 மேல்) நேர்காணல்கள், பங்கேற்பு போன்ற முறைமைகள் பயன்டுத்தப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்ததன் அடிப்படையில் ஆய்வின் முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**ஆய்வின் கண்டுபிடிப்புகள்**

**1. பொருளாதார வறுமை மற்றும் வேலை வாய்ப்பு குறைபாடு**

வேடர்கள்பாரம்பரியமாகவேட்டையாடல், காட்டுப் பழங்கள் சேகரித்தல், மீன்பிடி மற்றும் சேனைப்பயிர் போன்ற உற்பத்திப் பணி முறைகளை கொண்டிருந்தனர். ஆனால் 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், காலனிய கால வளர்ச்சி திட்டங்கள், வன உரிமைகள் மாற்றங்கள், உள்நாட்டுப் போர் (1983-2009) போன்ற காரணங்களால் இவர்களின் பாரம்பரிய வாழ்வாதார முறைகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளன.

குறிப்பாக கிழக்கு மாகாணம் (மட்டக்களப்பு. திருக்கோணமலை) பகுதியில் உள்ள 'கடற்கரை வேடர்கள்' (Coastal Vedda) என்று அழைக்கப்படும் சமூகத்தில் வேலைவாய்ப்பு மாற்றங்கள், நில உரிமை பிரச்சினைகள், கல்வி வாய்ப்பின் குறைபாடு போன்ற பிரச்சினைகள் அதிகம் உள்ளது. இந்த சூழலில், பெண்களது நிலை குறிப்பாக பலவினமானதாகும். வேடர் பெண்களின் பெரும்பாலானோர் மீன்பிடி, உழைப்பு வேலைகள், கடல்சார் பொருட்களை விற்பனை செய்தல் போன்ற தற்காலிகத் தொழில்களில் ஈடுபடுகின்றனர். நிலம் மற்றும் கடல் வளங்களின் உரிமை இல்லாமை, கடன் வசதிகள் இல்லாமை. பொருட்களின் விலை உயர்வு ஆகியவை இவர்களை பொருளாதார அடிமைத்தனத்திற்குள் தள்ளுகின்றன. கல்வி வாய்ப்பின் குறைவு வேலைவாய்ப்பில் தொடர்ச்சியான முன்னேற்றம் கிடைக்காமல் இருப்பது. வாகரைப் பகுதியிலுள்ள வேடர் சமூகத்தில் பெண்கள் பின்வரும் வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளனர்:

பண்பாட்டு மாறுதல் பாரம்பரிய வாழ்வியல் முறைகள் மாற்றம் ஆகுவதால் பெண்களின் பாரம்பரிய பணிகள் (உதா: காட்டுப் பழம் சேகரித்தல், வேட்டை உதவி) குறைந்து, மாற்று வேலைவாய்ப்பு குறைந்து வருகிறது.

இடம்பெயர்வு மற்றும் போர் பாதிப்பு வாகரை போன்ற பிரதேசங்களில் 30 ஆண்டுகள் நிலவி வந்த உள்நாட்டுப் போர் காரணமாக பணி, மக்களின் வாழ்க்கை முறை சிதைந்துள்ளது.

பெண் தலைமையிலான குடும்பங்கள் அதிகரிப்பு நெருக்கடி சமூக பாதுகாப்பு குறைவு. பொருளாதாரம்

மார்க்ஸ் கூறும் 'கரண்டல்' கோட்பாட்டின் அடிப்படையில், இவர்களின் உழைப்பின் மதிப்பு குறைவாக மதிக்கப்படுகிறது.

**எதிர்நோக்கும் சவால்கள்**

பணியிடங்கள் பெரும்பாலும் அங்கீகாரம் இல்லாத, கூலி வழி, மாற்றுச் சூழலில் உள்ள தொழில்கள் (Informal Sector) இதனால் பெண்கள் பாதுகாப்பற்ற சூழலில் இயங்குகின்றனர். கலாசார மற்றும் மொழி தடைகள்: வேடர் பெண்கள் தமிழ், சிங்கள மொழிகளில் கல்வித் திறன், வேலைவாய்ப்பு திறன் குறைபாடு, நில உரிமையின்மை, கடன் வசதி, பணிமாற்றம் பற்றிய அனுபவம் குறைவு. பெண்கள் குடும்பப் பணிகள்குழந்தைபராமரிப்புசமுகநம்பிக்கைகள்

போன்ற காரணங்களால் வேலை வாய்ப்புகளிலிருந்து விலகுகிறார்கள். இவை போன்ற காரணங்களினால் 98 வீதமான பெண்கள் வறுமை நிலையிலேயே வாழ்கின்றனர்.

**2. கல்வி மற்றும் அறிவாற்றல் பின்தங்கிய நிலை**

வாகரையில் வேடர்கள் வாழும் குஞ்சங்குளம், மதுரங்கேணிக்குளம் ஆகிய பிரதேசங்களில் கல்வி வசதிகள் மிகவும் குறைவு. மதுரங்கேணிக் குளத்தில் மட்டுமே ஒரு பாடசாலை அமைந்துள்ளது. பிரதான வீதியிலிருந்து 12KM தூரம் செல்ல வேண்டும் அவர்களுடைய பிரதேசத்திற்கு, போக்குவரத்துகள் மிகமிகக் குறைவு. போக்குவரத்திற்கான பாதை மிகவும் மோசம். மழை காலத்தில் பயணிக்கவே முடியாத சூழல் காட்டு விலங்குகள் ஒரு புறம். பாட சாலைகளில் பாகுபாடு என பல காரணங்களால் பெண்கள் கல்வியை இடைநிறுத்தும் நிலைக்குள்ளாகின்றனர். அதேபோன்று குடும்ப வறுமை மற்றும் கலாசார கட்டுப்பாடுகளின் காரணமாகவும் இவ் விளைவுக்குள்ளாகின்றனர். இதனால் பெண்களின் சமூக உயர்வு தடைப்படுகின்றது. இப்பிரதேச வேடர் பெண்களில் ஆய்வுக்குட்படுத்தப்பட்டோரில் 42 வீதமானோர் ஆரம்பக் கல்வியையும் க.பொ.த.சாதாரண தரம் வரை 27 வீதமானேரும் உயர்தரத்தினை 8 வீதமானோரும் கல்வியையும் வீதமானோரும் இனங்காணப்பட்டனர். பெண்கள் இவ்வாறு கல்வியில் அதிகமான தடைகளை சந்திக்கும் எந்தவிதமானதொரு பெறாதவர்கள் 23 வாய்ப்பு இருப்பதால், அறிவாற்றல் மேம்பாட்டுக்கு வாய்ப்புகள் குறைவாகும். மாணவியரின் அறிவு, விஞ்ஞான படிப்பு, தொழில்நுட்பம், மொழிதிறன் போன்றவை பின்தங்கி இருப்பதை ஆய்வு வெளிப்படுத்துகின்றது.

**3. சுகாதார மற்றும் மாதவிடாய், கர்ப்பகால பிரச்சினைகள்**

ஆரம்ப காலங்களில் இயற்கை மருத்துவ முறையையே கையாண்டுள்ளனர். காலவிய காலத்தின் பின் இவற்றில் மாற்றம் ஏற்பட்டுள்ளன. அதேவேளை உள்நாட்டில் ஏற்பட்ட யுத்தம் அவர்களிடையே இடப்பெயர்வினை ஏற்படுத்தியதுடன் இயற்கைச் சூழலிலிருந்தும் விடுபடவேண்டிய நிலைக்குள்ளாகினர். இதனால் அரச மருத்துவ மையங்களை நோக்கி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அரசு மருத்துவமையங்கள் தூரத்தில் உள்ளன. அதனால் போக்குவரத்து பற்றாக்குறை போன்ற காரணங்களால் பல பெண்கள் மருத்துவ ஆலோசனை பெற முடியாத சூழல் காணப்படுகிறது. கர்ப்பநிலை, பிரசவம், மாதவிடாய் சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு குறைவு. சிலர் பாரம்பரிய மூலிகை மருத்துவ முறைகளையே இன்றும் நம்புகின்றனர். வேடர்சமூகம் தங்களது சொந்த மருந்து முறைகள், சடங்குகள் மூலம் நோய்களை கையாள்கின்ற நிலை இன்றும் வேடர் பெண்களிடையே அவதானிக்க முடிந்தது. 60 வீதமான பெண்கள் இன்றும் இயற்கை மருத்துவத்தில் நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

**பாலின அடக்குமுறை மற்றும் குடும்ப வன்முறை**

ஆரம்ப காலங்களில் வேடர் பெண்கள் வன்முறை அனுபவம் குறைந்தவர்களாகவே காணப்பட்டனர் என கள ஆய்வின்போது குறிப்பிட்டார்கள். ஆனால் காலமாற்றம் இத்தகைய வன்முறைகளை அதிகரிக்கச் செய்துள்ளது எனக் குறிப்பிடுகின்றனர்.

சில வேடர் சமூகங்களில் ஆண்கள் தீரமான அதிகாரம் பெற்றுள்ளனர். பெண்களின் சொத்துரிமை குறைவு. குடும்ப வன்முறை. சமூக மதிப்பீட்டின் பயம் ஆகியவை அவர்களை அடக்குகின்றன. சமூகங்களில் பல்வேறு மொழி, கல்வி, பணியிட வாய்ப்பு, நில உரிமை ஆகியவை குறைவாகவுள்ளதால், பெண்களின் வன்முறையில் மீட்புப்பத்திர வாய்ப்புகள் குறைவாகவுள்ளது.

போரினால் ஏற்பட்ட பாதுகாப்பற்ற சூழலில், நிலம், குடும்பம், சமூக ஒற்றுமை நிலை போன்றவற்றினால் கடும் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளமையை ஆய்வின் மூலம் அறிய முடிந்தது. பெண்கள் பெரும்பாலான சமயங்களில்

சட்டரீதியானதும் மருத்துவ சேவைகளுக்கு அணுகல் இல்லாதவர்களாகவே காணப்படுகின்றனர். அவை பற்றிய அறிவு மிகவும் குறைவாகவே அவர்களிடம் காணப்படுகிறது.

வேடர் இனத்தை சேர்ந்த திருமணமான பெண் குறிப்பிடுகையில் நான் திருமணம் செய்து இரண்டு வருடங்கள் எனது கணவன் எங்கள் இனம் இல்லை. நாங்கள் காதல் திருமணம்தான் செய்து கொண்டோம். குணவன் வீட்டில்தான் திருமணம் செய்து வாழ்ந்தோம். ஆனால் அவர்களுடைய வீட்டில் கணவரும் அவருடைய வீட்டாரும் என்னை நீ வேடுவிச்சிதானே என்றும் மோசமான வார்தைகளால் எந்தநாளும் என்னை திட்டுவார்கள். என்னை ஒருநாள் அடித்து உன்னுடைய தாயிடம் நீ ஓடு என்று துரத்திவிட்டார்கள். நான் தற்போது எனது அம்மாவுடன்தான் வாழ்கிறேன் என்று கூறினார்." இவ்வாறாக பல பெண்களின் நிலை காணப்படுகிறது. 64 வீதமான பெண்கள் இவர்வாறானதொரு சூழலிலேயே வாழ்கின்றனர். பணியிடத்தில் 14% மான பெண்கள் வன்முறை காரணமாக வேலைக்குச் செல்ல முடியவில்லை.

வேடர் பெண்கள் உள்ளூராட்சி மன்றங்கள் அல்லது சமூக மேம்பாட்டு அமைப்புகளில் பங்குபெறுவது மிகக் குறைவு. இதனால், இவர்களின் பிரச்சினைகள் திட்டமிடலில் இடம் பெறுவதில்லை, அதனால் பின்தங்கியவர்களாகவும் பல பிரச்சிளைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிர்ப்பந்த நிலை காணப்படுகிறது.

**அவர்களுக்கான பரிந்துரைகளாக**

பெண்களுக்கான சிறு தொழில்கள், கூட்டுறவு முறைமைகள், பாரம்பரிய கலைநுட்பம் மற்றும் சுற்றுச்சூழல்-வழி வாழ்வியல்களை இணைத்த வணிகம் ஆகியவை முன்னேற்ற வாய்ப்புகளை வழங்குகிறது.

அரசு மற்றும் நிதிநிறுவனங்கள் ஒருங்கிணைந்து வேலைவாய்ப்பு பயிற்சிகள், நில உரிமை பாதுகாப்பு, கடற்கரை மீன்பிடி உதவிகள் போன்ற திட்டங்களை உருவாக்க வேண்டும்.

பெண்களின் தொழில்முனைவுத் திறன்களை மேம்படுத்தும் கல்வி-திறன்கள் விரிவாக வழங்கப்பட வேண்டும். வாகரை வேடர் பெண்கள் கல்வியில் பலவீனமான நிலைகளில் இருக்கின்றவர். முன்னேற்ற வாய்ப்புகள் மிகவும் குறைவு, பெற்றோர் கல்வியறிவு அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். சமூக-பொருளாதார நிலைகள் நெருக்கடியில் உள்ளது. இதனால் அவர்கள் அறிவாற்றல், தொழில்திறன், உயர்கல்வி வாய்ப்புகளை பெறுவதில் பின்னடைவு ஏற்பட்டு வருகிறது. இந்த நிலைக்கு தீர்வு காண அடுத்தடுத்தவையாக கல்வி கிடைக்கும் சூழலை ஏற்படுத்தி மாற்றுத் திட்டங்கள், பெண்களுக்கு உரிய பயிற்சிகள், தனிப்-பயிற்சி வகுப்புகள், மொழியறிவை அதிகரித்தல் போன்ற வகையில் கல்வித்தொடர் உதவிகள் அவசியம்.

**முடிவுரை**

இவ்வாய்வானது இலங்கையின் வாகரைப் பகுதியைச் சேர்ந்த வேடர் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளான பாலின அடக்குமுறை மற்றும் குடும்ப வன்முறைச் சூழ்நிலை, வறுமை, ஆணாதிக்கம், புறக்கணிப்பு மற்றும் நிறுவன ஆதரவின்மை ஆகியவற்றின் இணைப்பை வெளிப்படுத்துகிறது. வரலாற்று ரீதியாக வேடர்கள் இலங்கையின் பிரதான சமூகத்தின் எல்லைகளில் வாழ்ந்து தமது தனித்து வமான பண்பாட்டு மற்றும் சமூக மரபுகளை பேணியுள்ளனர். ஆனால் காலனித்துவத்திற்குப் பிறகு ஏற்பட்ட இடம்பெயர்வு, உள்நாட்டுப் போரின் விளைவுகள் மற்றும் பொருளாதார மாற்றங்கள்அவர்களின்கட்டமைப்புஉறவுகளில் தீவிரமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

குழுவைச் வாகரை வேடர் பெண்கள், பெண்களாகவும், விளிம்புநிலை மக்களாகவும், மேலும் கிராமப்புறக் குறைந்த வருமானக் சேர்ந்தவர்களாகவும் L160 அடுக்கடுக்கான பாகுபாடுகளை அனுபவிக்கின்றனர். இப்பகுதியில் குடும்ப வன்முறை உடல் மற்றும் மன உளவியல் வடிவங்களில் வெளிப்படுகிறது. இது

பெரும்பாலும் மதுப்பழக்கம், பொருளாதார நெருக்கடி மற்றும் குடும்பத்தின் ஆண் அதிக்கக் கட்டமைப்புடன் தொடர்புடையதாகும்.

பண்பாட்டு நெறிமுறைகள் பெண்களின் குரலை அடக்கி, கல்வி, சுகாதாரம் மற்றும் திரமானங்கள் எடுக்கும் இடங்களில் அவர்களின் பங்கேற்பைத் தடுக்கின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமப்புறப் பகுதிகளில் சுமார் மூன்று பெண்களில் ஒருவருக்கு வாழ்நாளில் ஏதேனும் ஒரு வகையான குடும்ப வன்முறை அனுபவமுள்ளதாகவும். உள்நாட்டு வன்முறை தடுப்பு சட்டம் குறித்த சட்ட அறிவு குறைவாக இருப்பதையும் ஆய்வு வெளிக்காட்டுகின்றது. சமூக அவமதிப்பு மற்றும் பழிவாங்கும் அச்சம் காரணமாக பலர் சட்ட அல்லது மருத்துவ உதவியைத் தேடுவதில்லை.

எனினும், உள்ளூர் சங்கங்கள், அரசு சாரா அமைப்புகளின் பாலின உரிமைகள் பயிற்சிகள் மற்றும் மூக சமரச முயற்சிகள் போன்றவை விழிப்புணர்வை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளன. ஆனால் நிலையான மாற்றம் ஏற்பட வேண்டுமெனில் கல்விக்கு சமவாய்ப்பு, பொருளாதார சுயநிறைவு மற்றும் பாலின அடிப்படையிலான குற்றங்களுக்கெதிரான கடுமையான சட்ட அமுலாக்கம் அவசியமாகும்.

அதனால், வாகரை வேடர் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு திவு காண்பது என்பது. மூதாதையர் பண்பாட்டு பார்வைகளை மனித உரிமைச் சட்டக் கட்டமைப்புகளுடன் ஒருங்கிணைப்பதன் மூலமாகவே சாத்தியம். இத்தகைய ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலமே பெண்களுக்கு சமத்துவம், பாதுகாப்பு. கண்ணியம் ஆகியவை உறுதி செய்யப்படும். இது சமூக நீதிக்கும். பாலின சமத்துவத்திற்கும் அவர்களது சகல பிரச்சினைகளுக்குமான தீர்வுக்கு வழிவகுக்கும்.

## References


1. Deraniyagala, S. U. (1992). The Prehistory of Sri Lanka: An Ecological Perspective. Colombo: Department of Archaeological Survey.
2. Obeyesekere, Gananath (2002). The Vedda Villages of Anuradhapura: The Historical Anthropology of a Community in Sri Lanka. Colombo: Vikas Publishing House.
3. Seligmann, C. G., Seligmann, B. Z. (1911). The Veddas. Cambridge: Cambridge University Press.
4. Perera, Sasanka (2013). Anthropology and the Marginalised. Indigenous Peoples of Sri Lanka. Colombo: Department of Sociology, University of Colombo.
5. Samarakoon, M. Thangarajah, Y. (2020). ''Patriarchy and Post&War Marginalization among the Eastern Vedda Communities.'' South Asia: Journal of Human Rights and Development, 18(3), 221 & 240.
6. Wijesekera, Nandadeva (1964). The Veddas in Transition. Colombo: The Ceylon Journal of Historical and Social Studies.